ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/26 - 2016 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2016.08.09

*1979/26 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

## வடக்கு மாகாண மாகாண சபை

***2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டம்***

வடக்கு மாகாண, மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை,

பேரவைச் செயலகம்,
ஏ 9 வீதி,
கைதடி,
2016, ஓகத்து 04.

வடமாகாணத்திற்கான வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையைத் தாபிப்பதற்கும்; வீதிப் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கான சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காவும் ; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச்சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச்சட்டம் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வடமாகாண ஆளுநர் எந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருவதற்கான அவரது சம்மதத்தை அளிக்கக்கூடுமோ அந்தத் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நியதிச்சட்டத்தின் குறிக்கோள்கள்.

2. இந்நியதிச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) வடமாகாணத்தில் வதிபவர்களுக்கு காப்பானதும் பாதுகாப்புள்ளதுமான சேவையை வழங்குதல்:

(ஆ) பயணிகளுக்கு வசதியானவையும் தரமுள்ளவையுமான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை உறுதிப்படுத்துதல்:

(இ) சௌகரியமானதும் மகிழ்ச்சிகரமானதுமான பயணச் சூழ்நிலையை வழங்குதல்:

(ஈ) போக்குவரத்துச் சேவைகளை வடமாகாணத்தின் எல்லாப் பாகங்களுக்கும் நீடித்தல்:



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(உ) பயணிகளின் போக்குவரத்துச் சேவைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளைத் தரமுயர்த்துதல்:

(ஊ) நடமாட்ட இயலாமைகளுடனான ஆட்களுக்குப் போக்குவரத்தானது முழுமையாகக் கிடைக்கக் கூடியதாக்கப்படுதல்: அத்துடன்

(எ) தேசியப் போக்குவரத்துச் சபைக்கும் தனியார் துறைக்குமிடையே நியாயமான போட்டாபோட்டிக்கு இடமளிப்பதன் மூலம் வினைத்திறனான பயணிகள் சேவையை வழங்குதல்.

**பாகம் 1**

**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையைத் தாபித்தல்**

*வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையைத் தாபித்தல்.*

3. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை என அழைக்கப்படுவதுமான அதிகாரசபையொன்று இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, இப்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*அதிகாரசபையின் முகாமைச் சபையினது அமைப்பு.*

4. (1) அதிகாரசபையின் அலுவல்களினது நிருவாகமும் முகாமையும் (இதனகத்துப்பின்னர் " சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதிகாரசபையின் முகாமைச் சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்: அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதிவிவழியுறுப்பினர்கள் ; அதாவது:-

(i) போக்குவரத்து என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் மாகாண அமைச்சுச் செயலாளர் அல்லது அவ்வமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(ii) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மோட்டார் வாகனத் திணைக்களத்தின் பொறியியலாளரொருவர் ;

(iii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட மாகாண அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அலுவலரொருவர் ;

(iv) மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ; அத்துடன்

(v) மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ; அத்துடன்

(ஆ) போக்குவரத்து என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டிய பின்வரும் உறுப்பினர்கள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) :-

(i) வட மாகாண தனியார் பேரூந்துமுதலீட்டுக் கம்பனிகள் சங்கத்தின் தலைவர் அல்லது அச்சங்கத்தினுடைய நிருவாக சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிருவாக சபை உறுப்பினரொருவர் ;

(ii) சட்டம், போக்குவரத்து, வர்த்தகம், பொறியியல், கல்வி, நிதி அல்லது நிருவாகம் போன்ற துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டியவர்களான இரு உறுப்பினர்கள் ;

(iii) வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சேவையளித்துள்ள ஓர் உறுப்பினர் ;

(iv) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரினது விதப்புரையின்மீது முகாமையாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஓர் உறுப்பினர்:
அத்துடன்;

(v) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவரினது விதப்புரையின்மீது முகாமையாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஓர் உறுப்பினர்.

(2) சபையின் தலைவர் சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பதன்மூலம் பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை அவர் வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) அமைச்சர், நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுதல் உசிதமானதெனக் கருதினால், அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர் அவ்வாறு செய்யலாம்.

(5) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட அப்பொருள்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(6) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பதன்மூலம், பதவி விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம், உடற்தகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சர், அத்தகைய தகவலைப் பெற்றதன் மேல், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அவரினிடத்திற் செயலாற்றவென வேறொராளை நியமிக்கலாம்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்.

5. (1) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) தலைவர், சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைவர் சமூகமளிக்காமையின் போது சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிவழியுறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின் மூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தலைவர், தமது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய சபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடி யற்றனவாகக் கருதப்படுத லாகாது.

6. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாகவோ அல்லதுசபையின் உறுப்பினரொருவரின் நியமனத்திலும் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாகவோ மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

சபை உறுப்பினர்களின் ஊதியம்.

7. சபை உறுப்பினர்களுக்கு, மாகாண சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

சபை உறுப்பினராகவிருப்பதற்கான தகைமையீனம்.

8. நான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் சபையுறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும் :-

(அ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருந்தால்;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருந்தால்;

(ஈ) அவர், ஒழுக்கக் கேட்டை உட்படுத்துவதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான சிறைத்தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்;

(உ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(ஊ) அவர், சபையுறுப்பினராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமானமுறையில் அல்லது பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்;

அல்லது

(எ) அவர், சபையுறுப்பினராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதில் தகாத வழிகளில் அழுத்தங்களைப் பிரயோகித்தல்.

அதிகார சபையின் இலச்சினை.

9. (1) அதிகார சபையின் இலச்சினை, சபை காலத்துக்குக் காலம் முடிவு செய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகார சபையின் இலச்சினை, சபையின் வலுவளிப்புடனும் சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலும் அன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகார சபையின் இலச்சினையானது எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய பதிவேடொன்றை சபையானது பேணுதல் வேண்டும்.

## பாகம் II

### அதிகார சபையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும்

*அதிகார சபையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும்.*

10. அதிகார சபையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) வடமாகாணத்தினுள் பயணிப் போக்குவரத்துத் தேவைகளை ஈடுசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்திலான பேரூந்துச் சேவைகள் கிடைக்கக்கூடியமையைக் கண்காணித்தலும் நேர அட்டவணைகளைத் தயாரித்தலும் பேரூந்துத் தொழிற்படுநர்கள் அத்தகைய நேர அட்டவணைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(ஆ) வினைத்திறனான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துக்காக பேரூந்துத் தொழிற்படுநர்களுக்குப் பொதுவான மற்றும் விசேடமான பணிப்புகளை வழங்குதல்;

(இ) பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக பேரூந்துகளின் பயன்பாட்டை அதிகாரமளிக்கின்ற பயணிச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் ;

(ஈ) பயணிச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் பேரூந்துத் தொழிற்படுத்துநர்களைப் பதிவு செய்வதற்குமான நிபந்தனைகளை விதித்துரைத்தல்;

(உ) எந்த நிபந்தனைகளுக்கமைய பயணிச் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றனவோ அந்த நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல்;

(ஊ) பேரூந்துகளுக்குத் தகுதிச்சான்றிதழ்களை வழங்குவதற்குக் குறித்த சில நிறுவனங்களுக்கு விதந்துரைத்தல்;

(எ) அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய விபரத் திரட்டுகளையும் தகவலையும் கொடுத்துதவும்படி பயணிச் சேவை அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்போரைத் தேவைப்படுத்துதல்;

(ஏ) பயணிச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்துதல் என்பவற்றுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்களையும் அது தொடர்பான வேறேதேனும் கருமத்தையும் காலத்துக்குக் காலம் தீர்மானித்தலும் மீளாய்வு செய்தலும் ;

(ஐ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயணி ஏற்றிச் செல்கைச் சேவை அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பேரூந்து ஒன்றில் வெளிக்காட்டிவைக்கப்பட வேண்டிய சேரிடப்பலகைகள் தகடுகள் மற்றும் அடையாளச் சின்னங்கள் தொடர்பிலான கருமங்களை விதித்துரைத்தல்;

(ஒ) பேரூந்துகளின் சாரதிகளினாலும் நடத்துநர்களினாலும் பேணப்பட வேண்டிய ஆவணங்களையும் அவற்றின் கண் பதியப்பட வேண்டிய தகவலையும் குறித்துரைத்தல்;

(ஓ) பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பேரூந்தொன்றில் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் பேணப்பட வேண்டிய தரநியமனங்களும் தகுதி நிலைமையும் தொடர்பிலான கருமங்களை விதித்துரைத்தல்;

(ஔ) பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பேரூந்துகளின் சேவைத் தொழிற்பாட்டு முறைமாற்றுகள் தொடர்பில் பேணப்படவேண்டிய பதிவேடுகளைத் தீர்மானித்தல்;

(க) அதிகாரப்பத்திரம் வைத்திருப்பவரினால் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பேரூந்தொன்றின் சாரதியாக அல்லது நடாத்துநராகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பதிவேடுகளையும், சேவைகளைத்

தொடங்கும் மற்றும் சேவைகளிலிருந்து இல்லாதொழியும் நேரத்தையும், அனுமதிக்கப்பட்ட ஓய்வு இடைவேளைகளையும், அத்தகைய ஆட்களுக்குச் செலுத்தப்பட்ட வேதனங்கள், படிகள் அல்லது கட்டணங்களையும் தீர்மானித்தல்;

(ங) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நியதிச் சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள எவரேனுமாளுடன் கூட்டு முயற்சி என்ற வகையாகவோ செய்து கொள்ளுதலும், புரிதலும், நிறைவேற்றுதலும்;

(ச) பயணிப் போக்குவரத்துத் தொடர்பிலான சட்ட விரோதமான செயற்பாடுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்தலும், அத்தகைய சட்டவிரோதமான செயல்களைத் தடுக்கும் நோக்கத்துக்காக அணிகளைத் தாபித்தலும், அத்தகைய அணிகளின் தத்துவங்களையும் பணிகளையும் விதித்துரைத்தலும்;

(ஞ) அதிகாரசபையினால் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கான கட்டணங்களை விதித்தல்;

(ட) போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளினதும் ஒழுங்கமைப்புகளினதும் ஒத்திசைவுடன் பயிற்சி நிலையங்களைத் தாபித்தல்;

(ண) போக்குவரத்துச் சேவைகளில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலும் பங்குபற்றுநர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதலும் ;

(த) அதிகார சபையின் ஊழியர்களை நியமித்தலும், பதவி நீக்குதலும், அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(ந) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும் அல்லது விற்பனை செய்தலும் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தலும்;

(ப) பணமாகவோ அல்லது வேறு வகையாகவோ கொடைகளை, மானியக் கொடைகளை, நன்கொடைகளை அல்லது உதவிப் பணங்களை ஏற்றுக்கொள்ளுதலும் நியதிச் சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தலும்;

ஆயின், அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் எல்லாம் தொடர்பிலும், சபையானது, நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

அத்துடன்

(ம) நியதிச்சட்டத்தின்முறையான மற்றும் பயனுள்ள நிறைவேற்றுகைக்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

## பாகம் III

### பயணி ஏற்றிச்செல்கை அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்

கிரமமான சேவைகளுக் காகவும் விசேட சேவைகளுக் காகவும் பயணி ஏற்றிச் செல்கைச் சேவை அனுமதிப் பத்திரங்கள்.

11. ஆளெவரும், அதிகாரசபையினால் வழங்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படுவதுமான) பயணி ஏற்றிச் செல்கைச் சேவை அனுமதிப்பத்திரமொன்றின் அங்கீகாரத்தின் கீழன்றி, கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வடமாகாணத்தினுள் ஆரம்பிக்கின்ற கிரமமான சேவையின் அல்லது விசேட சேவையின் நோக்கத்துக்காக பேருந்தொன்றைப் பயன்படுத்தலாகாது.

12. பதினோராம் பிரிவின் கீழான ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அத்தகைய பேரூந்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரராகவிருந்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும் :- விண்ணப்பதாரரொருவருக்கான தகைவுடைமை.

(அ) அத்தகைய பேரூந்துக்கான செல்லுபடியுள்ள அரசிறை உரிமம் ;

அத்துடன்

(ஆ) அத்தகைய பேரூந்து தொடர்பில் தமது பெயரிலான மூன்றாந்திறத்தவர் இடர்களுக்கெதிரான செல்லுபடியுள்ள வரையறுக்கப்படாத காப்புறுதி.

13. (1) அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்படக் கூடியாவாறான அத்தகைய படிவத்தில் எந்த பேரூந்து தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த பேரூந்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் கைப்பட அதிகார சபைக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும். அதிகார சபை, அவசியமானவிடத்து, குற்றப்பதிவுட்பட மேலதிகத் தகவலைக் கொடுத்துதவும்படி விண்ணப்பதாரரைக் கோரலாம். அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பம்.

(2) அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் விண்ணப்பத்துடன் சேர்த்து பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பம் எந்த பேரூந்து தொடர்பானதோ அந்த பேரூந்தின் பதிவிலக்கம், ஆசனக் கொள்ளளவு, உற்பத்தி ஆண்டு மற்றும் உட்புற உயரம்;

(ஆ) விண்ணப்பம் எந்த பேரூந்து தொடர்பானதோ அந்த பேரூந்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டதுமான தகுதிச் சான்றிதழின் பிரதியொன்று;

(இ) ஆரம்பிக்குமிடம், முக்கிய இடையீட்டிடம், சேரிடம், வழித்தட இலக்கம் மற்றும் வழித்தடத்தின் தூரம்; அத்துடன்

(ஈ) தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், தேவைப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிப் பூரணமானதும் செம்மையானதுமான தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பொய்யான அல்லது பிழையான தகவலை அல்லது விபரங்களை கொண்டுள்ளதாகக் காணப்பட்ட விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

14. (1) அதிகார சபையானது, காலத்துக்குக்காலம், போக்குவரத்துச் சேவைகளை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரங்களைக் கோரலாம். இவ்வாய்ப்பு, ஆகக் குறைந்தது மூன்று உள்நாட்டு ஊடகத்தில் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலொன்றில் அல்லது அதற்கு அதியுச்சப் பிரசித்தத்தைக் கொடுப்பதற்குக் கருதப்பட்டவாறான அத்தகைய வேறு வழிவகைகள் மூலம் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். போக்குவரத்துச் சேவைகளுக்காகக் கேள்விப்பத்திரங்களைக் கோருதல்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில, 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தேவைப்பாடுகளைக் கொண்ட கம்பனிகளை, போக்குவரத்துச் சேவைகளை நடாத்துவதற்குத் தமது உட்கருத்தை எடுத்துக்கூறுகின்ற தமது கேள்விப்பத்திரங்களை அனுப்பும்படி அழைத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலிற்கமைவாக, குறித்துரைக்கப்பட்ட வழித்தடம் அல்லது வழித்தடங்கள் தொடர்பான நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அதிகார சபையானது, முடிவுத் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் திறத்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரரின் தேவைப்பாடுகள், அனுபவம் மற்றும் நிதிசார் அத்துடன் தொழில்நுட்ப ஆற்றலை மதிப்பீடு செய்தலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ்கேள்விப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரருக்கு, பிரிவுகள் 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

தகுதிச் சான்றிதழ்.

15. (1) பேருந்துகளின் இயைபான பரீட்சிப்பு மற்றும் பரிசோதனையின் மேல் அத்தகைய பேருந்துகளுக்குத் தகுதிச் சான்றிதழ்களை வழங்கும்படி அதிகார சபை குறித்த சில நிறுவனங்களுக்கு விதந்துரைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விதப்புரையின் மேல், அமைச்சர், தகுதிச் சான்றிதழ்களை வழங்கும் நோக்கத்துக்காக அத்தகையள நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாகவுள்ள அறிவித்தல் வேண்டும்.

(3) இப் பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் அதிகார சபையிடம் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கு வதற்கான பிரமாணங்கள்.

16. அதிகார சபையானது அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படும் முன்னர் பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளுல் வேண்டும் :-

(அ) பயணிகளின் உத்தேசிக்கப்பட்ட ஏற்றிச் செல்கை, பொதுமக்கள் நலன்கருதி எந்த அளவுக்கு அவசியமானதாகவுள்ளதோ அந்த அளவு ;

(ஆ) உத்தேசிக்கப்பட்ட வழித்தடத்தின் அல்லது வழித்தடங்களின் பொருத்தமான தன்மை;

(இ) ஏதேனும் உத்தேசிக்கப்பட்ட வழித்தடத்தின் அல்லது வழித்தடங்களின் தேவைகளுக்கு எந்த அளவுக்கு ஏலவே போதிய வகையில் சேவையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அளவு ;

(ஈ) போதிய, பொருத்தமான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துச் சேவைகளை வழங்குதலுட்பட வாகனப் போக்குவரத்துத் தொடர்பாக முழுமையாக இடரப்பரப்பின் தேவைகளும் புகையிரதத்தின் மூலமான போக்குவரத்துட்பட எல்லா வகையினவையுமான பயணிப் போக்குவரத்தை ஒருங்கிணைத்தலும்;

(உ) ஏதேனும் இடப்பரப்பில் அல்லது ஏதேனும் வழித்தடத்தில் புகையிரதத்தின் மூலமாக வழங்கப்பட்ட வசதிகளுட்பட்ட எவையேனும் போக்குவரத்து வசதிகள், அதிகார சபையின் அபிப்பிராயத்தில் அவ்விடப்பரப்பினுள் அல்லது அவ்வழித்தடத்தில் பொது மக்களின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்குத் திருப்திகரமானவையாகவும், வினைத்திறனானவையாகவும் உள்ளவிடத்தெல்லாம், சொல்லப்பட்ட போக்குவரத்து வசதிகளுடன் போட்டா போட்டியாக அதே இடப்பரப்பினுள் அல்லது பொருளளவில் அதே வழித்தடத்தில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அதிகாரமளிக்கின்ற அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் விரும்பத்தக்கதல்ல என்ற கருத்து ;

அத்துடன்

(ஊ) ஒரு வழித்தடத்துக்காக அல்லது வழித்தடங்களுக்காக ஒன்று அல்லது அதற்க மேற்பட்ட அனுமதிப்பத்திரங்களை ஏலவே வைத்திருப்பவராகவுள்ள விண்ணப்பதாரருக்கு அதே வழித்தடம அல்லது வழித்தடங்கள் தொடர்பில் இன்னுமோர் அனுமதிப்பத்திரத்தை வழங்குதல், எவையேனும் விரும்பத்தக்கனவாகவிராத விளைவுகளை ஏற்படுத்தலாமென்ற நியாயமான நம்பிக்கையை அதிகார சபையில் உருவாக்குகின்ற சூழ்நிலைகள்.

அனுமதிப் பத்திரத்தை வழங்குவதிலான முன்னுரிமை.

17. பத்தினாறாம் பிரிவின் கீழான பிரமாணங்களை திருப்திப்படுத்தப்படுவதன் மேல், அதிகார சபை, அவ்விடப்பரப்பில் அல்லது மாவட்டத்தில் வதிகின்ற விண்ணப்பதாரருக்கு முன்னுரிமையளிக்கலாம்.

சோதனை.

18. பதின்மூன்றாம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் மீது அதிகார சபை, விண்ணப்பமானது எந்த பேருந்து தொடர்பானதோ அந்த பேருந்தின் சோதனையை நிறைவேற்றும்படி அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

*19.* பதினெட்டாம் பிரிவின் கீழ் அதிகரமளிக்கப்பட்ட அலுவலர், தமது சோதனை முடிவுற்றதன் மேல், பேரூந்து தொடர்பில் அவரினால் நிறைவேற்றப்பட்ட சோதனை பற்றி இயைபான எல்லா விபரங்களையும் எடுத்துக்கூறி அதிகார சபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். பேரூந்தானது போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு அல்லது போக்குவரத்துச் சேவையை வழங்குவதில் ஈடுசெய்வதற்குத் தகுதியானதும் முறையானதுமாவென்பதை அறிக்கை உள்ளடக்குதல் வேண்டும். அறிக்கை.

*20.* பத்தொன்பதாம் பிரிவின் கீழான அறிக்கையைப் பெற்றதன் மேல், அதிகார சபை, அறிக்கையில் அடங்கியுள்ள கருமங்களையும், விதப்புரைகள் எவையேனுமிருப்பின் அவற்றையும் கவனத்திற் கொண்டதன் மீது ஒன்றில் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அவரினால் பதியப்பட்ட காரணங்களுக்காக அனுமதிப்பத்திரமொன்றை வழங்காமல், நிராகரிப்பு செய்தல் வேண்டும். அனுமதிப்பத் திரத்தை வழங்கு தல்.

*21.* இருபதாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று - அனுமதிப் பத்திரத்தின் படிவமும் கால எல்லையும்.

(அ) அதிகார சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்;

(ஆ) அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும் ;

(இ) அனுமதிப்பத்திரத்திற் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்;

அத்துடன்

(ஈ) முன்னர் இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, அனுமதிப்பத்திரத்திற் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

*22.* (1) விண்ணப்பமொன்று இருபதாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று முடிவுறும் தேதிக்கு முன்னர் முப்பது விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து புதுப்பிப்பதற்கு அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அனுமதிப்பத்திர மொன்றைப் புதுப்பித்தல்.

(2) அதிகாரசபையானது, பின்வருமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மீது உரிமமொன்றைப் புதுப்பிக்கலாம் :-

(அ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மீறியிராதவிடத்து அல்லது அதன் நியதி நிபந்தனைகளுக்கு முரணாக எதனையும் செய்யாதுள்ளவிடத்து;

(ஆ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியை அல்லது எவையேனும் பணிப்புகளை மீறியிராதவிடடத்து ; அல்லது

(இ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், போக்குவரத்துத் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியிராதவிடத்து.

*23.* (1) இருபதாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று பின்வருமாறாயின் அதிகார சபையினால் இடைநிறுத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம் :- அனுமதிப் பத்திரத்தை இடை நிறுத்துதல் அல்லது இல்லா தாக்குதல்.

(அ) பொய்யான அல்லது பிழையான அல்லது செம்மையற்ற தகவலை வழங்கியதன் மூலம் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்ததெனக் காணப்படின்;

(ஆ) சாரதி அல்லது நடத்துநர், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும ஒழுங்குவிதியை அல்லது எவையேனும் பணிப்புகளை மீறியிருப்பின்;

(இ) பொது மக்களின் அதியுச்ச நலன்கருதி அது அவசியமாகவரின்;

(ஈ) பேரூந்தானது பயணிகளின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கின்றதாகவரின்;

(உ) பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது சாரதி அல்லது நடத்துநர் வேண்டுமென்று பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறியிருப்பின்,

(2) வழக்கப்பட்டவோர் அனுமதிப்பத்திரம் இப்பிரிவின் கீழ், விடயத்துக்கேற்ப, இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இல்லாதாக்கப்படுமிடத்து, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் கொடுக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலின் கீழ் அனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடலின் மூலம், அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை பற்றி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு உடனடியாக அறிவிப்பது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

காரணங்கள் அறிவிக்கப்பட வேண்டும்.

24. விடயத்துக்கேற்ப, 13 ஆம் பிரிவின் அல்லது 22 ஆம் பிரிவின் கீழான அனுமதிப்பத்திரத்தின் வழங்குதலுக்கான அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் அதிகார சபையினால் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் பற்றி விண்ணப்பத்திற் காணப்படுகின்ற முகவரிக்குப் பதிவஞ்சலின் கீழ் அனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடலின் மூலம், அத்தகைய விண்ணபத்தைச் செய்கின்ற ஆளுக்கு அறிவிப்பது அதிகார சபையின் கடமையாதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

25. (1) அனுமதிப்பத்திரமொன்றின், விடயத்துக்கேற்ப, வழங்குதலை அல்லது புதுப்பித்தலை மறுக்கின்ற முடிவொன்றினால் அல்லது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் இடைநிறுத்துகையினால் அல்லது இல்லாதாக்குகையினால் இன்னலுற்ற எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, அம்மறுப்பு அல்லது இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை பற்றி எழுத்திலான தொடர்பாடல் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சருக்கு எழுத்திலான மேன்முறையீடு செய்யலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் கீழான மேன்முறையீடு ஒன்று கிடைக்கப்பெற்றதன் மீது, போக்குவரத்து அமைச்சின் இரு அலுவலர்களையும் சட்டத்தரணியொருவரையும் உள்ளடக்கியதான மேன்முறையீட்டு குழுவொன்றை அமைத்தல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீட்டை அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தலும் வேண்டும்.

(3) மேன்முறையீட்டுக்குழுவானது பொருத்தமானதெனக் கருதுமிடத்து, (2) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான ஏதேனும் முடிவுக்கு வருமுன்னர், அத்தகைய விசாரணையை அது நடாத்தலாம்.

(4) (2) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான முடிவு, அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து அறுபது நாட்களினுள் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய முடிவு உடனடியாக அமைச்சருக்கு அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

(5) அமைச்சர், (4) ஆம் உட்பிரிவின் கீழ் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மேல் முடிவை அமுலாக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீது மேன்முறையீட்டுக்குழுவின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

அனுமதிப்பத்திம் கைமாற்றப் படற்பாலது.

26. (1) அனுமதிப்பத்திரமானது கைமாற்றப்பட முடியாதது- எனினும் அனுமதிப்பத்திரத்தை வேறொராளுக்கு அல்லது வழித்தடத்திற்கு கைமாற்ற விரும்புகின்ற எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அது தொடர்பில் அதிகார சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, திருப்திப்படுவதன் மேல், நிபந்தனைகளுடனோ அவையின்றியோ அத்தகைய கைமாற்றத்தை அனுமதித்தல் வேண்டும்.

*27.* போக்குவரத்து வழங்குதல் தொடர்பாக அல்லது அது சம்பந்தமாகச் சூழ்நிலைகளிலான மாற்றங்கள் பற்றி அதிகாரசபைக்கு அறிவித்தல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமை.

*28.* இருபதாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும், பொதுமக்களின் பாதுகாப்பையும் வசதியையும் உறுதிப்படுத்துவதற்காக அதிகாரசபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய எல்லா நிபந்தனைகளும் அதனோடு இணைக்கப்பட்டனவாகவிருத்தல் வேண்டும். அத்தகைய நிபந்தனைகள் மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றைத் தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகளை உள்ளடக்கலாம்.

20 ஆம் பிரிவின் கீழான அனுமதிப் பத்திரங்களுடன் நிபந்தனைகள் இணைக்கப்படுதல்.

(அ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்து, அனுமதிப்பத்திரத்திற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வழித்தடத்தில் அல்லது வழித்தடங்களில் மற்றும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நேர அட்டவணைக்கிணங்கத் தொழிற்படுத்தப்படுதல் வேண்டுமென்றும்.

(ஆ) நேர அட்டவணையினதும் பயணக் கட்டண அட்டவணையினதும் பிரதிகள், அனுமதிப்பத்திர அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படுகின்ற பேரூந்தில் கொண்டுசெல்லப்பட்டு வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டுமென்றும்.

(இ) அனுமதிப்பத்திரம் எந்த வழித்தடம் தொடர்பானதோ அந்த வழித்தடத்தில் பேரூந்துகள் பயணஞ்செய்தல் வேண்டுமென்றும்.

(ஈ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்து எல்லா நேரங்களிலும் தகுதியான மற்றும் பயன்படுநிலைமையில் பேணப்படுதல் வேண்டுமென்றும்.

(உ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்தின் சாரதியினதும் நடத்துநரினதும் விடயத்தில், பேரூந்துகளின் சாரதிகள் அல்லது நடத்துநர்கள் தொடர்ச்சியாகக் கடமையிலிருக்கக்கூடிய நேரம் மற்றும் அவர்களின் வேலை அல்லது ஓய்வு நேரங்கள் அத்துடன் அவர்களின் வேதனங்கள் என்பன தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவாவென்றும்.

(ஊ) நடத்துநர் பயணிக்குப் பயணச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டுமென்றும்.

(எ) அதற்கான அனுமதிப் பத்திரத்திற் குறித்துரைக்கப்பட்ட பயணிகளின் அதிகபட்ச எண்ணிக்கையை விஞ்சுகின்ற எண்ணிக்கையினவான பயணிகளை நடத்துநர் அனுமதித்தலாகாதென்றும்.

(ஏ) பயணக்கட்டண அட்டவணையை விஞ்சுகின்ற ஏதேனும் கட்டணத்தை நடத்துநர் விதித்தலாகாதென்றும்.

(ஐ) அத்தகைய பேரூந்து பழுதடையும் விடயத்தில், நடத்துநர் பயணக் கட்டணத்தை வீதப்படியான அடிப்படையில் மீளளித்தல் வேண்டுமென்றும்.

(ஒ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதியும் நடத்துநரும் எல்லா நேரங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டுமென்றும், பேரூந்தில் பயணம் செய்கின்ற பயணிகளின் நலத்தை அல்லது வசதியைப் பாதிக்கின்றவாறான அத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு அல்லது தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்றும்.

(ஓ) சலுகை ரீதியிலான பருவச்சீட்டுக்கள் பற்றிய திட்டமொன்றின் தொழிற்பாடு சம்பந்தமான ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டுமென்றும்.

(ஔ) அவசியமானவிடத்து, அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர், விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கப் பயணிகளுக்குத் திருப்திகரமான மற்றும் வினைத்திறனான சேவையை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபையுடன் உடன்படிக்கையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டுமென்றும்; அத்துடன்

(க) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதியும் நடத்துநரும் எல்லா நேரங்களிலும் பயணிகளை அன்பாகவும் மரியாதையுடனும் நடாத்துதல் வேண்டுமென்றும்;

(ங) சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் சீருடை அணிய வேண்டுமென்றும்.

அனுமதிப்பத்திரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பேரூந்தின் அளவுக் குறிப்பீடு.

29. அதிகாரசபையானது, அனுமதிப்பத்திரத்தை வழங்கும் நேரத்தில், எந்த பேரூந்தின் பயன்பாடு அனுமதிப்பத்திரத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த பேரூந்தை, அதன் வேறு பிரித்துக்காட்டும் இலக்கத்தையும் அவசியமென அது கருதக்ககூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் குறிப்பீடு செய்வதன்மூலம், அதன்கண் குறித்துரைக்கலாம்.

ஏனையோருக்குப் பணிப்புகள் வழங்குவதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவம்.

30. ஏதேனும் செல்லுபடியான பயணி ஏற்றிச் செல்கைச்சேவை அனுமதிப்பத்திரத்தினை வைத்திருக்கும் எவரேனும் ஆளுக்கு அதிகாரசபை பணிப்புகளை வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகள் எந்த ஆளுக்கு வழங்கப்படகின்றனவோ அந்த ஆள், வடமாகாணத்தினுள், அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய காலத்தினுள் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

பேரூந்தின் புதிய சொந்தக்காரர் சொத்தாண்மை மாற்றம் பற்றி அதிகார சபைக்கு அறிவித்தல்.

31. (1) வடமாகாணத்தினுள் பயணி ஏற்றிச்செல்கைச் சேவையில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்கு கருதுகின்ற எவரேனுமாள், எந்த பேரூந்து தொடர்பில் அனுமதிப்பத்திரமொன்று ஏலவே வழங்கப்பட்டுள்ளதோ அந்த பேரூந்தை வாங்குமிடத்து, அத்தகைய பேரூந்தின் சொத்தாண்மை மாற்றம் பற்றி அவர் உடனடியாக அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பேரூந்து தொடர்பில் அதிகாரசபையினால் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புரைக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுள்ள தொழிற்படுத்துநரொருவர் அவருக்குச் சொந்தமான பேரூந்தை விற்பனைசெய்யுமிடத்து அல்லது பராதீனப்படுத்துமிடத்து, அவர் 60 நாட்களினுள் அதிகாரசபையினூடாக வேறொரு பேரூந்துக்கு அனுமதிப்பத்திரத்தைத் திருத்தியமைத்துக்கொள்ளுதல் வேண்டும். அது அவ்வாறு திருத்தியமைக்கப்பட்டிராவிடின், அத்தகைய அனுமதிப்பத்திரம் இல்லாதாக்கப்படுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அதிகார சபைக்கு அறிவித்தல்.

32. (1) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அனுமதிப் பத்திரத்துக்கான அவரது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களிலான ஏதேனும் மாற்றம் பற்றி, அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து 14 நாட்களினுள் எழுத்தில் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மீதான அதன் முடிவை எழுத்தில் பெறுதலும் வேண்டும்.

(2) செல்லுபடியுள்ள அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள பேரூந்தொன்று ஒரு தொழிற்படுத்துநரினால் வாங்கப்படுமிடத்தும் அல்லது தனக்கெனக் குறித்தளிக்கப்படுமிடத்தும் புதிய பயணிச்சேவை அனுமதிப்பத்திரமொன்று பெறப்படுமிடத்தும், தொழிற்படுத்துநர், அதே பேரூந்துக்கு முன்னர் வழங்கப்பட்ட பயணிச்சேவை அனுமதிப்பத்திரத்தில் கொடுக்கப்பட்ட விசேடமாக வழித்தடம் அல்லது நேரஅட்டவணை பற்றிய ஏதேனும் உரிமைக்கு உரித்துடையவராதலாகாது.

அனுமதிப்பத்திரம் காற்றுத்தடைக் கண்ணாடியின் மீது வெளிக் காட்டி வைக்கப் படுதல்.

33. எந்த பேரூந்து தொடர்பில் ஓர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த பேரூந்தின் காற்றுத்தடைக் கண்ணாடியின் மீது அத்தகைய அனுமதிப்பத்திரத்தை துலாம்பரமான முறையில் வெளிக்காட்டி வைத்தல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் IV

### அதிகாரசபையின் பணியாள் தொகுதியினர்

அதிகார சபையின் பொது முகாமையாளர்.

34. (1) அதிகாரசபையின் பொது முகாமையாளராகவிருப்பதற்கான ஆளொருவர் சபையின் கருத்தொருமைப்பாட்டுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் அதன் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அல்லது மாகாண பொதுச் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாள் தொகுதிக்குத் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஓராம், இரண்டாம், மூன்றாம் உட்பிரிவுகளின் கீழ் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபைக்கு நியமிக்கப்படுகின்றவிடத்து, அரசாங்க மற்றும் மாகாண சேவைக்குரிய நியமன ஏற்பாடுகளையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(5) ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு, விடயத்துக்கேற்ப, அரசாங்கத்துக்கு அல்லது வடமாகாணத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளைச் சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சபைக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப, அரசாங்கத்துக்கான அல்லது வடமாகாணத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நிதியம்

அதிகார சபையின் நிதியம்.

39. (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காக வடமாகாண சபையினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இந்நியதிச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழுக்காக அல்லது வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்காக அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையின் சார்பில் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்கான விதிப்பனவுகள் என்ற வகையாகப் பெறப்பட்டட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அல்லது அரசிறையும்; அத்துடன் ;

(ஈ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அதிகாரசபையின் நிதியத்தின் வரவுக்கு வேறுவகையாகத் திரளுகின்ற வேறெல்லாப் பணத்தொகைகளும்,

(3) அதிகார சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் ஏற்பட்ட செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு.

40. அதிகார சபையின் நிதியாண்டு சனவரி முதலாம் திகதி முதல் திசெம்பர் முப்பத்தோராம் திகதி வரையான ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

41. (1) சபையானது, அதிகார சபையின் சொத்துக்களும் பொறுப்புக்களும், வருமானமும் செலவினமும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளும் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் நிதிசார் விதியும் அதிகார சபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*42.* 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், அதிகார சபையின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் மற்றும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை.*

## பாகம் VI

### தவறுகளும் தண்டமும்

*தவறுகள்.*

43. (அ) சபையினால் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஆ) அதிகார சபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் இந்நியதிச் சட்டத்தினால் அவருக்களிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்தகைய ஆளை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற ;

(இ) ஏதேனும் விபரத்திரட்டை தகவலை அல்லது எழுத்திலான விளக்கத்தைக் கொடுத்துவவும்படி அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படும் போது அவ்வாறு செய்யாது விடுகின்ற அல்லது மறுக்கின்ற ;

(ஈ) தமது அறிவுக்கெட்டியவரை பொய்யானதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள தகவலைக் கொண்டுள்ள ஏதேனும் விபரத்திரட்டை, தகவலை அல்லது எழுத்திலான விளக்கத்தை அதிகார சபைக்குக் கொடுத்துதவுகின்ற ; அல்லது

(உ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற,

அத்தகைய ஆள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத்தண்னை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*செல்லுபடியான அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் செல்வதில் ஈடுபடுதல்.*

*44.* பயணிகளை ஏற்றிச் செல்லும் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரமின்றி அந்நோக்கத்துக்காக ஈடுபடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும், இரண்டாவது தடவையும் குறித்த தவறொன்றினை புரியும் பட்சத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும், அடுத்துப்பின்னரான குறித்த தவறொன்றின் விடயத்தில் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாடுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*விஞ்சுதலான விதிப்பனவை மீளளித்தல்.*

*45.* பேரூந்தொன்றில் நடத்துநர் ஒரு பயணியிடமிருந்து விஞ்சுதலான பயணக்கட்டணத்தை அறவிடுவாராயின், அவர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றை புரிகின்றாரென்பதுடன், நீதவான் ஒருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன், மேலதிகமாக பயணியிடமிருந்து அத்தகைய விஞ்சுதலாக அறவிடப்பட்ட பணத்தை மீளளிக்கும்படியும் அவருக்குக் கட்டளையிடலாம்.

*நடத்துநரினால் தவறொன்று புரியப்படுதல்.*

46. (அ) ஒரு பேரூந்துத் தரிப்பிடமல்லாத ஏதேனுமிடத்தில் எவரேனும் பயணியை பேரூந்தினுள் ஏறுவதற்கு அல்லது அதிலிருந்து இறங்குவதற்கு அனுமதிக்கின்ற;

(ஆ) தொல்லை விளைவிக்கும் முறையில் கூக்குரலிடுகின்ற மற்றும் சத்தமிடுகின்ற;

(இ) பயணக்கட்டணத்தை பெற்றுக்கொண்டு பயணிக்குச் சீட்டொன்றை வழங்கத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

பேரூந்தொன்றின் நடத்துநர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், மூவாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பயணியினால் தவறொன்று புரியப்படுதல்.

47. (1) பயணியொருவர்-

(அ) தமக்கு வழங்கப்பட்ட பயணச்சீட்டை பயணம் முடியும் வரை தம்வசம் வைத்திருக்கத் தவறுமிடத்து;

(ஆ) அத்தகைய பயணச்சீட்டை சபையினால் அதிகாரமளிக்கப்பட்டவர் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படும்போதெல்லாம் அவ்வாறு செய்வதற்குத் தவறுமிடத்து,

அவர் ஐந்நூறு ரூபாவான தண்டத்துக்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன், அதனோடு சேர்த்து மேலதிகமாக, அவர் எந்தத் தூரத்துக்குப் பயணம்செய்தாரோ அந்தத் தூரத்துக்கான பயணச்சீட்டின் பெறுமதியினது இரட்டித்த தொகையை சபையினால் அதிகாரமளிக்கப்பட்டவருக்கு செலுத்துதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அத்தகைய தொகையைச் செலுத்தத்தவறுகின்ற அத்தகைய பயணி தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அவர் பயணித்த சேரிடத்துக்கான பயணசீட்டின் பெறுமதியினது இரட்டித்த தொகையோடு மேலதிகமாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுக்களினாலான தவறுகள்.

48. இந்நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினாற் புரியப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், பொது முகாமையாளர், செயலாளர் அல்லது வேறு ஒத்த அலுவலராகவிருந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமமொன்றாகவிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுமத்தின் பங்காளராகவிருந்த ஆளொவ்வொருவரும்,

அத்தவறானது தாம் அறியாமல் அல்லது தமது உள்நோக்கின்றி புரியப்பட்டதென்றும், தமது பணிகளின் தன்மையையும் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்க வேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தாவொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

### பொது ஏற்பாடுகள்

அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் மீதான மட்டுப்பாடு.

49. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், வழித்தடமொன்றில் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கு பேரூந்துதொன்றுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமிடத்து, அத்தகைய பேரூந்தின்அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் போக்குவரத்துச் சேவையல்லாத ஏதேனும் சேவைக்காக அத்தகைய பேரூந்தைப் பயன்படுத்துதலாகாது.

ஒரு பேரூந்துக்கு ஓர் அனுமதிப் பத்திரம்.

50. ஒரு வழித்தடத்தில் போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரமொன்று ஏலவே வழங்கப்பட்டுள்ள பேரூந்துக்கு அதிகாரசபை இன்னுமோர் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதலாகாது.

விபரத்திரட்டுகள் முதலியன.

51. இந்நியதிச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அதிகாரசபைக்குத் தேவையாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் விபரத்திரடடை, தகவலை அல்லது விளக்கத்தை ஓர் எழுத்திலான அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் கொடுத்துதவும்படி அதிகாரசபை, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கலாமென்பதுடன், அத்தகைய

அறிவித்தலின் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதலும் வேண்டும்.

அமைச்சரின் விதப்புரைகள்.

52. அமைச்சர், பயணிப் போக்கவரத்துச் சேவைகளின் நன்மைக்காக, பேரூந்துகளைக் கொள்வனவு செய்வதற்காகவும் வரிச்சலுகைகளுக்காகவும், அரசின் பொதுவான கொள்கைக்கிணங்க, வசதிகளை வழங்குவதற்கு வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பொருத்தமான நேரங்களில் சமர்ப்பிக்கலாம்.

ஏதேனும் பேரூந்துக்குள் பிரவேசித்தல் முதலியவற்றுக்கான தத்துவம்.

53. அதிகாரசபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள்–

(அ) பயணிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பேரூந்தின் பாவனை ஓர் அனுமதிப்பத்திரத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதாவென்பதை அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளுக்கு அல்லது வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கிகொழுகப்படுகின்றதாவென்பதை அல்லது இந்நியதிச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகப்படுகின்றதாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பேரூந்தினுள் பிரவேசிக்கலாம்;

(ஆ) அப்பேரூந்து தொடர்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது நிகழ்வுப்பதிவுத்தாள் அல்லது பேரூந்துக்கு இயைபான வேறேதேனும் ஆவணம் அத்தகைய பேரூந்தின் சாரதியினால் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம் அத்துடன்

(இ) அத்தகைய நிகழ்வுப்பதிவுத்தாளை அல்லது வேறு ஆவணத்தைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம் அல்லது அதன் பிரதியைப் பெறலாம்.

குறித்தசில கருமங்களின் மீது சபையானது பணிப்புகளை வழங்கலாம்.

54. (1) பயணிகளின் நலன்கருதி வடமாகாணத்தின் எல்லைகளினுள்ளான பேரூந்துத் தரிப்பிடங்களினதும் பேரூந்து நிறுத்திடங்களினதும் அமைவிடத்தை எம்முறையிலேனும் தாபிப்பதற்கு, அப்புறப்படுத்துவதற்கு, பேணுவதற்கு, சீராக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு இயைபான உள்ளூரதிகாரசபையினூடாக அல்லது தோதானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வழிவகைகள் மூலம் சபையானது பணிப்புகளை வழங்குவதற்கும் ஒருங்கேற்பாடுகளைச் செய்வதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) பேரூந்துத் தரிப்பிடங்களிலிருந்து அல்லது நிறுத்திடங்களிலிருந்து பேரூந்துகளைத் தொழிற்படுத்துவதற்கான நேர அட்டவணைகளை வலுவுறுத்துவதற்கும் நேர அட்டவணைகளை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ள பணியாள் தொகுதியினரை மேற்பார்வை செய்வதற்கும் அத்தகைய பணியாள் தொகுதியினருக்கும் பணிப்புரைகளையும் அறிவுறுத்துதல்களையும் வழங்குவதற்கும் சபையானது தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பேரூந்துகளின் தொழிற்பாட்டுக்கான நேர அட்டவணைகளை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ள பணியாள் தொகுதியினரை பொது முகாமையாளர் அல்லது அமைச்சின் செயலாளர் சபையின் கருத்தொருமைப்பாட்டுடன் நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதல் உட்பட அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம்.

(4) சபை பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமப்புற போக்குவரத்துச் சேவைகள் தொடர்பாக வழங்கலாம்.

அதிகார சபையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் கையளித்தல்.

55 (1) சபையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இந்நியதிச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் சபையின் தலைவருக்கு அல்லது உறுப்பினருக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய தலைவர் அல்லது அத்தகைய உறுப்பினர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்பகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

அமைச்சரின் பணிப்புகள்.

56 அமைச்சர், காலத்துக்குக்காலம், இந்நியதிச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாகச் சபைக்கு அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புளை வழங்கலாம்.

வருடாந்த அறிக்கை.

57 (1) சபையானது, ஒவ்வோராண்டிலும், முன்னைய ஆண்டு தொடர்பான செயற்பாடுகளின் விபரமான அறிக்கையொன்றைத் தயாரித்து அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிக்கை, ஒவ்வோராண்டும் யூன் முப்பதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர் அத்தகைய அறிக்கையை வடமாகாணசபைக்கு முன்வைத்தல் வேண்டும்.

சபை மற்றும் அதிகார சபையின் எல்லா உறுப்பினர்களும், பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.

58. சபையின் எல்லா உறுப்பினர்களும் மற்றும் அதிகாரசபையின் அலுவலர்களும், சேவையாளர்களும், முகவர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் பொருளுக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகார சபை அட்டவணைப் படுத்துப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

59. அதிகாரசபையானது, (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச்சட்டத்தின் பொருளுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

செலவுகள், அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்.

60 (1) சபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துரட்சியில் அல்லது குற்றவழக்கில் சபையினால் ஏற்பட்ட எல்லாச் செலவுகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துரட்சியில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினால் அறவிடப்பட்ட செலவுத் தொகைகள் மட்டுமே அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தின்கீழ் சபையின் உறுப்பினரொருவரினால், பொது முகாமையாளரினால், அதிகாரசபையின் எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல்தொடர்பில் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துரட்சியில் அல்லது குற்றவழக்கில் ஏற்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துரட்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

வழிகாட்டு நெறிகள்.

61. சபையானது காலத்துக்குக்காலம், பின்வருவன உட்பட வடமாகாணத்தில் வதிபவர்களுக்கும், உள்வருபவர்களுக்கும் பாதுகாப்பானதும், வினைத்திறனானதும், பாதுகாப்புள்ளதுமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகளை வழங்கலாம் :-

(அ) தனியார் பேரூந்துகளின் சொந்தக்காரர்களினதும் முச்சக்கரவண்டிகளின் சொந்தக்காரர்களினதும் பாரமற்ற வாகனங்களின் சொந்தக்காரர்களினதும் கனரக வாகனங்களின் சொந்தக்காரர்களினதும் பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களின் சொந்தக்காரர்களினதும், கழகமொன்றை அமைத்தலும் பதிவு செய்தலும் ;

(ஆ) வாகனச் சொந்தக்காரர்களின் சம்மேளனத்தை அமைத்தலும் கண்காணித்தலும் ; அத்துடன்

(இ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவற்றின் அமைப்பு விதியையும் விதிகளையும் வகுத்தமைப்பதற்காக உதவுதல்

62. (1) குறிப்பாகப் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும், இந்நியதிச் சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :- ஒழுங்குவிதிகள்.

(அ) ஓர் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதில், புதுப்பிப்பதில் கைமாற்றுவதில் அல்லது திருத்தியமைப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள் மற்றும் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஆ) ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்துகளின்மீது கொண்டு செல்லப்படவேண்டிய தகடுகளும் குறிகளும் ;

(இ) ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்துகளின் சாரதிகளினாலும் நடத்துநர்களினாலும் கொண்டுசெல்லப்படவேண்டிய ஆவணங்களும் அவற்றின்மீது பதியப்படவேண்டிய விபரங்களும்;

(ஈ) ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பேரூந்தைப் பயன்படுத்துகின்ற எவரேனும் ஆளினால் பின்பற்றப்படவேண்டிய நியமங்களும் அத்தகைய நியமங்களுக்கு முரணான செயல்களை அல்லது செய்யாமைகளைத் தடைசெய்தலும்;

(உ) ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட பேரூந்தினால் மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் தொடர்பில் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகள்;

(ஊ) ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பேரூந்துகளின் சாரதிகளாக அல்லது நடத்துநர்களாக அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்கள் தொடர்பில் அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகளும் அத்தகைய ஆட்கள் வேலை தொடங்குகின்ற மற்றும் இல்லாதொழிகின்ற நேரங்களும் அவர்களினால் எடுக்கப்பட்ட ஓய்வு இடைவேளைகளும்;

(எ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் வைத்திருக்கப்பட்ட பதிவேடுகளைப் பேணிக்காத்தலும், அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அத்தகைய பதிவேடுகள் சோதனையிடப்படுதலும், அத்தகைய அதிகாரசபையினால் செய்யப்பட்ட கோரிக்கையின்மீது அத்தகைய பதிவேடுகளை அத்தகைய சோதனை நோக்கத்துக்காகக் காண்பித்தலும்;

(ஏ) பயணிப் போக்குவரத்துச் சேவையின் நலன்கருதி அனுமதிப்பத்திரங்கள் வைத்திருப்போரின் தொழிலை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறையும் அவர்களினால் பணி நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கைமுறையும்;

(ஐ) அனுமதிப்பத்திரங்கள் வைத்திருப்போரின் கலந்தாலோசனையுடன் வகுத்தமைக்கப்பட்ட சலுகை ரீதியிலான பயணசீட்டுக்கள் அல்லது பருவச்சீட்டுக்கள் பற்றிய திட்டம்;

(ஒ) குறிப்பாக பேரூந்துத் தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காகவும் அட்டவணைப்படுத்து வதற்காகவும், நேரம் கணிப்பதற்காகவும், மற்றும் வசதிகளைக் கிரமமான முறையிலும் ஒப்புரவான முறையிலும் பயன்படுத்துவதற்காகவும் பேரூந்துத் தரிப்பிடங்களையும் பேரூந்து நிறுத்திடங்களையும் ஒழுங்குபடுத்துதலும் முகாமை செய்தலும்;

(ஓ) ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பேரூந்துகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதிகளினதும் நடத்துநர்களினதும் தகைமைகளைத் தீர்மானித்தலும் அவர்களின் உடற்தகுதி பற்றிய காலாகாலச் செவ்வை பார்த்தல்களைச் செய்தலும்;

(ஔ) அவசரகால அல்லது இக்கட்டான நிலைமைகளில் அல்லது வடமாகாணத்தினுள்ளான நிலைமைகளில் அல்லது வடமாகாணத்தினுள்ளான ஏதேனும் இடப்பரப்பில் அல்லது ஏதேனும் வழித்தடத்தில் பயணிப் போக்குவரத்துச் வேவைகளில் பாரதூரமான சேவைமுறிவு நிகழவுள்ளதெனக் கருதப்படும்போது எடுக்கப்பட்டவேண்டிய வழிமுறைகள்;

(க) வடமாகாணத்தினுள்ளான பயணிப் போக்குவரத்துச் சேவைகளிலான வினைத்திறனை ஒழுங்குபடுத்துதல் அல்லது சீராக்குதல் பற்றி அதிகாரசபைக்கு மதியுரையளிக்கும் நோக்கங்களுக்காக மதியுரை ஆட்கள் குழுக்களை அமைத்தலும் அல்லது அவற்றுக்கான உறுப்பினர்களை நியமித்தலும் அவர்களின் தத்துவங்களும் பணிகளும், புதிய சேவைகளை ஆரம்பித்தலும், பயணிகளிடமிருந்தும் அனுமதிப்பத்திரங்கள் வைத்திருப்போரிடமிருந்தும் அறவிடப்படவேண்டிய பயணக்கட்டணங்களும், கட்டணங்களும் விதிப்பனவுகளும், வெவ்வேறு வழித்தடங்களிலான பேரூந்துகளின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துதலும், அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்போரினால் சேவைகள் பேணப்படுவதில் ஒப்பேற்றுத் தன்மையை உறுதிப்படுத்துதலும், வேறெவையேனும் இயைபான கருமங்களும்;

(ங) மாணவர்கள் மகளிர், குழந்தைகள், விசேட தேவைகள் உள்ளோர், மூத்த பிரஜைகள் உள்ளிட்ட பயணிகளின் பாதுகாப்பு, வசதி மற்றும் சௌகரியம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளை வகுத்தமைத்தலும் வலுவுறுத்துதலும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேணடுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதியினுள் அங்கீகாரத்துக்காக வடமாகாணசபையின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படவேண்டிய திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பேணல்கள்.

63. இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முற்போந்த நாளன்று வடமாகாணத்தினுள் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து இந்நியதிச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிலைமாறுகால ஏற்பாடுகள்.

64. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், 3ஆம் பிரிவின் கீழ் அதிகாரசபை தாபிக்கப்படும்வரை அமைச்சர் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

65. இந்நியதிச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

''உள்ளூரதிகாரசபை'' என்பது, மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாதல் வேண்டும் ;

''அமைச்சர்'' என்பது, வடாமாகாண போக்குவரத்துஎன்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருள்படும் ;

''பேரூந்து'' என்பது, மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் பேரூந்தாகப் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் கோச்சு என்று பொருளாகுமென்பதுடன், இருநோக்க வாகனத்தை உள்ளடக்குவதாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

''பயணி'' என்பது, ஒரு வாடகைக் காரில் அல்லது பேரூந்தில் கொண்டு செல்லப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும் ஆனால் சாரதியை உள்ளடக்காது அல்லது ஒரு பேரூந்தின் நடத்துநரை உள்ளடக்காது; அத்துடன்

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது, இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் தமிழ் மொழி மூல உரை மேலோங்கி நிற்றல்.

66. இச்சட்டத்தின் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், தமிழ்மொழிமூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

8-664

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.